www.padippakam.com

Tamil Canadian

(அ) உலகத்தமிழர் 15—09 1991

# தமிழ் கனடியன்

Published by World Tamil Movement

## சிறுதொழில் பிரச்சினைகளின் தீர்வுக்கான உதவி பெறும் வழிமுறைகள்

—கே. ஜீ—

**நோக்கம்:**

சிறிய தொழில் ஒன்றை ஆரம்பிப்பது சுலபமானது. ஆனால், அதில் எழும் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பது இலகுவானதல்ல. இந்நாட்டின் வர்த்தக பொருளாதார அமைப்புக்குள் தொழில் முயற்சியில் எழும் சிக்கல்களை நிவர்த்தி செய்ய எத்தகைய உதவிகளைப் பெறலாம் என்பதை ஏற்கனவே தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தொழில் முயற்சியொன்றில் ஈடுபடவுள்ளவர்களுக்கும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு தொழில் முயற்சியாளர் என்ற வகையில் அல்லது சிறிய வியாபாரி என்ற வகையில் உங்கள் சொந்த வழியிலேயே செயற்படுவதை நீங்கள் விரும்புவீர்கள். ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிறருடைய உதவிகளைப் பெற வேண்டிய நிலை ஏற்படும் போது பொருத்தமான ஆலோசனைகளைப் பெறுவது என்பது இலகுவாக அமைவதில்லை. ஒரு தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உதவிகளை வழங்கும் வழி முறைகளைப் பொதுவாக மூன்று வகைகளாகக் கொள்ளலாம். இவ்வழி முறைகளைப் பற்றி விபரிப்பதற்கு முன்னர் உதவிகளை அல்லது ஆலோசனைகளைப் பெறுவதற்கு உங்களை எவ்வாறு தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

பிரச்சினை ஒன்றுக்கான தீர்வை நாடி நீங்கள் செல்லு முன்னர் அப்பிரச்சினை பற்றிய தெளிவான கருத்து உங்களிடம் இருத்தல் மிக முக்கியமானதாகும். பிரச்சினை பற்றிய தெளிவான கருத்து உங்களிடம் இல்லாத போது அதற்குச் சரியான தீர்வைக் காண்பது என்பது அசாத்தியமானதாகும். இந்நிலை உங்கள் நேரத்தையும், பணத்தையும் வீணாக்குவதுடன் பிரச்சினையை மேலும் சிக்களாக்கும். ஏனெனில் நீங்கள் உதவி நாடிச் செல்லும் இடம் தவறான இடமாக அமைந்து விடும்.

நீங்கள் உதவி நாடிச் சென்றவரது அபிப்பிராயங்கள் உங்கள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு அவசியமானதாகும். அவரது அபிப்பிராயங்கள் சில சமயங்களில் உங்கள் எதிர் பார்ப்பிற்கு முரண்பட்டதாக இருப்பின் உங்கள் எதிர் பார்ப்பு சாத்தியமாகுமா? என்பதை அவ்விடத்திலேயே தெளிவுபடுத்திக் கொள்ளல் உங்கள் பொறுப்பாகும். ஏனெனில் உங்கள் எதிர் பார்ப்பு என்ன என்பதை நீங்கள் தெளிவுபடுத்தும் போது இலகுவான மாற்றுத் திட்டங்கள் கிடைக்கப் பெறலாம்.

பிரச்சினை ஒன்றுக்கான தீர்வை நாடி நீங்கள் உதவி பெறச் செல்லும் போது உங்களிடத்தில் சில கருத்துக்கள் நிச்சயமாக இருக்கும். ஆலோசனை அல்லது உதவி செய்பவரது கருத்துக்கள் உங்கள் கருத்திற்கு ஒத்துவராத போது நீங்கள் கோபப்படுவது தவறு. ஏனெனில், நீங்கள் கோபப்படுவதன் மூலம் உங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறும் சந்தர்ப்பத்தை இழந்து விடுகிறீர்கள். ஒரு திறன் மிக்க தொழிற் முயற்சியாளன் எந்தச் சூழ்நிலையிலும் தனக்குச் சாதகமான தகவல்களைப் பெறத் தவறுவதில்லை.

பிரச்சினைக்கான தீர்வு வழிகளை அறிந்து கொண்ட பின்னர் பொருத்தமான செயற்பாடுகளை வரையறுத்தலும், அவற்றைச் செயற்படுத்தல்அடுத்த படியாகும். செயற்பாடுகளை நடை முறைப் படுத்துவதற்கு ஏற்ற முறையில் உங்களிடம் உள்ள வளங்களைச் சரியான முறையில் தெரிவு செய்வதும், பயன்படுத்துவதும் முக்கியமானதாகும். ஏனெனில் உங்களது வளங்கள் செலவு குறைந்தவையாகவும், நேரத்தைச் சேமிக்கக் கூடியவையாகவும் மனத்திருப்தியுடன் பயன்படுத்தக் கூடியவையாகவும் அமையக்கூடும்.

தொழிற் பிரச்சினைக்கான உதவியை நாடிச் செல்லும் போது முதலில் உங்கள் நிறுவனத்தில் அறிமுகமானவர்களை நாடுதல் சிறந்தது. உங்கள் தொழிலாளர்கள், பங்காளிகள், உங்கள் கணக்குப் பதிவேடுகள் என்பன அடங்கும்.

ஒரு திறமை மிக்க தொழில் உரிமையாளர் தனது தொழிலாளர்களது திறமையைச் சரியாகப் பயன்படுத்துவாரேயன்றி, அவர்களை மட்டுப்படுத்தவோ, புறக்கணிக்கவோ முயற்சிக்க மாட்டார். உங்கள் தொழிற் பிரச்சினைக்கு உங்கள் தொழிலாளர்கள் மூலம் தீர்வு காணக் கூடியதாக இருப்பின் இதுவே சிறந்ததும், மலிவானதுமான செயற்பாடாக அமையும்.

ஒரு முயற்சியின் முன்னேற்றமும், வெற்றியும் அம்முயற்சியின் உரிமையாளர் எவ்வளவு தூரம் தனது தொழிலாளர்களைத் தனது முயற்சியில் பங்கு கொள்ள வழி வகுக்கின்றார் என்பதில் தங்கியுள்ளது. இது தொழிலின் அளவைப் பொறுத்தது என்பதைவிட உரிமையாளரது திறமையைப் பொறுத்தது என்பதே கவனிக்கப்பட வேண்டியதாகும்.

தொழிலாளர்களது திறமையை நன்றாகப் பயன்படுத்துவதற்கு தொழிலின் உரிமையாளர் ஒழுங்கான கால அடிப்படையில் தனது முகாமையாளர்களுடனும், மேற்பார்யாளர்களுடனும் ஆலோசனைகளை நடாத்துவதும், அவர்களைத் தொழிலாளிகளுடன் கூடி ஆலோசனைகளைப் பகிர வழிவகுத்தலும் வேண்டும். அத்துடன், தொழிலாளிகளையும் திட்டமிடல், கட்டுப்பாடு, இலக்கிணை அடைதல் என்பவற்றில் ஈடுபடுத்துதல் வேண்டும். அவர்கள் தமது கடமைகளைத் திறனாகச் செய்ய வேண்டுமாயின் அவர்களுக்கும் சில பொறுப்புக்களை வழங்குதல் வேண்டும்.

தொழில் முயற்சியின் பெரும்பாலான பிரச்சினைகள் தொழிலாளர் மட்டத்தில் இருந்தே எழுகின்றன. எனவே அவர்களது ஒத்துழைப்பு உங்கள் தொழிலாளர்களில் திறமை மிக்கவர்களைத் தெரிவு செய்வதும் அவர்களது திறனை மேலும் விருத்தி செய்வதும் உங்கள் தொழிலின் முன்னேற்றத்திற்கான சிறந்த ஒரு முறையாகும்.

இரண்டாவதாக, உங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கக்கூடிய பிரதான வழி ஒழுங்கான முறையில் உங்கள் கணக்குகளையும், புள்ளி விபரங்களையும் பராமரித்தலாகும். ஒரு வெற்றிகரமான கணக்கு வைத்தல் முறை உங்கள் முயற்சியைப் பிடித்திருக்கும் அல்லது பிடிக்க இருக்கும் நோயை இலகுவில் இனங்கண்டு கொள்ளும். உங்கள் கணக்கு விபரங்கள் உங்கள் முயற்சியின் போக்கைத் தீர்மானிக்கும் கணக்கு விபரங்களின் ஒப்பீடுகள் உடனடித் தேவைகள், தீர்மானங்களை வலியுறுத்தும்.

நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் வியாபாரத்துடன் தொடர்பான புள்ளி விபரங்களின் முக்கியத்துவத்தை உணர்வதில்லை. புள்ளி விபரங்கள் வியாபாரத்தில் என்ன நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை உணர்த்தும்.

(ச) பக்கம் பார்க்க

## சரியான முறை எது?

திகதியையும், நேரத்தையும் இலக்க வடிவில் எழுதும் பொழுது சரியான முறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். திகதியை எழுதும் பொழுது நாளை முதலாகவும், மாதத்தை அடுத்ததாகவும், வருடத்தை கடைசியாகவும் எழுதுவதே சரியான முறை. உதாரணமாக, 15-9-91 என்பது 15ம் திகதியையும் 9ம் மாதத்தையும் (SEPTEMBER) 1991ம் ஆண்டையும் குறிக்கும். 2000ம் ஆண்டில், ஆண்டின் இலக்கத்தை முழுமையாகவே எழுத வேண்டிய நிலை ஏற்படும்.

நேரத்தை இலக்க வடிவில் எழுதும் பொழுது மணித்தியாலத்தை முதலாகவும், நிமிடத்தை அடுத்ததாகவும், வினாடியை கடைசியாகவும் எழுதவேண்டும். உதாரணமாக, 11:20:15 என்பது 11 மணி, 20 நிமிடம், 15 வினாடிகள் என்பதையே குறிக்கும்.

## யார் புதிய ஒன்ராரியோ வைத்திய அட்டையைப் பெறலாம்?

குறிப்பாக இளையவர்கள் இப் புதிய ஒன்ராரியோ வைத்திய அட்டைக்கு (NEW ONTARIO HEALTH CARD) தகுதியற்றவர்கள் என நினைக்கிறார்கள்: வயது, நிதிவசதியின்மை போன்ற காரணங்களுக்காக தமக்கு வைத்திய அட்டை கிடையாது என நினைக்கின்றார்கள். இது தவறு. கனடாவில் சட்டபூர்வமாக வசிப்பவர்கள் அனைவரும் இவ்வைத்திய அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். இது வரை விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பப்படிவத்தை பெற்று உடன் விண்ணப்பிக்கலாம். தற்பொழுது ஒன்ராரியோவில் அமுல் படுத்தப்பட்டுள்ள ஒரு அணுகு முறையின் படி நீங்கள் உங்கள் வைத்திய அட்டைக்காக காத்திருக்கும் காலப்பகுதியில் உங்கள் வைத்திய செலவைப் பெற்றுக் கொள்ள படிவங்கள் உண்டு. இப்படிவங்கள் உங்கள் வைத்தியர்கள் கையொப்பமிட்டு தமது வைத்திய பணத்தை பெற்றுக்கொள்ளமுடியும். இளையவர்கள் வைத்திய ஆலோசனைக்கு நாடும் போது அவர்களுக்கான வைத்திய சேவைகள் அந்தரங்கமாக வைக்கப்படினும், அவர்கள் தமது உடல் நிலைகுறித்து தமது பெற்றோருக்கு அறியத்தருவது அவசியமாகும்.

## புதிய ஜனநாயகக்கட்சி பகிஷ்கரிப்பு?

உண்மையான கனேடிய மக்கள் மத்தியில் அரசியல் அமைப்புக் கமிட்டியில் இடம் பெற பிரதமர் மல்றோனி அனுமதியளிக்கா விடின் தனது கட்சி அக்கமிட்டியை பகிஷ்கரிக்கலாம் என புதிய ஜனநாயகக்கட்சித்தலைவி மக்ளாக்கன் தெரிவித்துள்ளார்.

மல்றோனியின் திட்டப்படி அக்கமிட்டியில் இடம் பெறும் 30 உறுப்பினர்களும் அரசியல் வாதிகளே. இதனை புதிய ஜனநாயகக்கட்சி (N.D.P) எதிக்கின்றது. தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள மூன்று ஆசனங்களை கனடாவின் பூர்வீக மக்கள், பெண்கள்

## கனடாவின் புதியயாப்பு

கனடாவிற்கான புதிய யாப்பு ஒன்று தயாரிக்கப்படும் நிலையில் உள்ளது. இதில் சேர்க்கப்படவிருக்கும் விஷயங்கள் 10ம் 11ம் திகதிகளில் மத்திய அரசின் மந்திரி சபையில் ஆராயப்பட்டது. இதில் முக்கியத்துவம் பெற்ற விஷங்கள் கலை, கலாச்சாரம் முதலியனவும் வேலை வாய்ப்புகளிற்கான பயிற்சிகளும் மாகாண அரசாங்கங்களிடம் கையளிப்பதே ஆகும். இவைகள் கியூபெக் மாகாணத்தைத் திருப்தி செய்யவே தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர். இதைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் இவ் விஷயங்களில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை எனவும் கியூபெக் மாகாணம் மேலும் பல சலுகைகளை பெற முயற்சி செய்யும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

படிப்பகம்

# தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் BBC செய்தி

விடுதலைப்புலிகளின் முகாமின் வாயிலில் தெளிவான ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தாயே என்னை தேட வேண்டாம். நான் தமிழீழத்துடன் திரும்ப வரு வேன் என்பதே அந்தச் செய்தி. நூற்று க்கணக்கான இளம் இளைஞர்களும், யுவதிகளும் விடுதலைப்புலிகள் இயக் கத்தில் சேர்ந்துள்ளார்கள். அவர்களின் பெற்றோர்கள் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாங்களின் வாயிலில் தங் கள் பிள்ளைகளைக் காணக் காத்துக் கிடக்கின்றார்கள். இதனால் தான் அப் படியொரு வாசகம் எழுதப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணமே முழக்கங்கள் மலிந்த நகரமாகி விட்டது. விடுதலைப்புலிக ளின் கோஷங்கள் ஐம்புலன்களையும் தாக்குகின்றன. நகரின் மையப்பகுதி யில் இருந்து. புலிகளின் குரல் என் னும் வானொலி ஒலிபரப்பும், தேசபக் திப் பாடல்கள் ஒலி பெருக்கியில் முழ ங்கிக் கொண்டிருக்கின்றன. போரில் வீரமரணமடைந்தோரின் நினைவாக பல ஓவியங்கள் சுவர்களில் தீட்டப் பட்டுள்ளன. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வெடிகள் நிரப்பப்பட்ட வாகன மொன்றை, ஸ்ரீலங்கா இராணுவ முகாம் ஒன்றின் மீது மோதிய விடுத லைப்புலிகளின் தற்கொலைப்படை வீரனின் நினைவாக, அந்த இராணுவ முகாமின் இடிபாடுகளுக்கு அருகில் அவர் ஓவியம் ஒன்று வரையப்பட்டு ள்ளது. அதன் கீழ் உனது தோள்களில் எரிமலையைச் சுமக்கின்றாய், உன்னை ஒருவராலும் தோற்கடிக்க முடியாது என்று எழுதப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தன்னம்பிக்கை மிக்கவர்களாக உள்ளார்கள். உலகின் மற்றைய கொரில்லா அமைப்புக்களை விட இந்த அமைப்பின் தலைவர்கள், தமது கொள்கை குறித்து உறுதி யாக உள்ளார்கள். இந்த உறுதியின் சின்னம் தான் சயனைட் குப்பி மூன்று மாத இராணுவப் பயிற்சி முடித்த அனைவரும், இக்குப்பியை கழுத்தில் மாலையாக தொங்க விட்டுக் கொள் கிறார்கள். எதிரியின் கையில் சிக்கும் நிலை ஏற்பட்டால், உடனடியாக குப்பி யிலிருக்கும் சயனைட்டை விழுங்கி வீரமரணம் எய்துகின்றார்கள். இதன் மூலம் இரகசியங்களைக் காப்பாற்றி விடுகிறார்கள். வெளியாருக்கு இவ்வி டயம் படுமோசமானதாக தோன்றுகி ன்றது. ஆனால், இளம் விடுதலைப்புலி களுக்கு இது இயல்பானதாகவே தோன்றுகின்றது.

“We’re waiting to be 15. Then we will use guns, not leaflets.”

B.B.C நிருபர் வட புலம் சென்று திரும்பிய பின் அவர் வெளியிட்ட கருத்துக்களும் செய்திகளும்



யாழ்ப்பாணத்திற்கு வடக்கே ஒரு பயி ற்சி முகாமில், 200 இளம் விடுதலைப் புலிகள் பயிற்சி பெற்று வருகின்றார் கள். காலையில் இரத்தச் சிவப்பு நிறத் திலிருக்கும் விடுதலைப்புலிகளின் கொடி ஏற்றப்பட்டு, தமது இயக்கத் தின் கொள்கைகளை காப்பது பற்றிய உறுதி மொழியை அனைவரும் எடுத் துக் கொள்கிறார்கள். அதைத் தொட ர்ந்து உடற்பயிற்சி, இராணுவப் பயிற்சி முடிந்த பின் அரசியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இந்த அரசியல் வகுப்புக்களில், பெரும்பான்மை இனத் தவரான சிங்களவர், தமிழருக்கு இழைத்த அநீதிகள் பற்றியும், விடுத லைப்புலிகளின் பார்வையில் மாண்பு வரலாறு என்னவென்றும் போதனை நடக்கின்றது. இது மூளைச் சலவை அல்லவா என்று கேட்டால், விடுதலை ப்புகளின் தலைவர்கள் அல்ல என்று மறுத்து விடுகிறார்கள். தங்கள் இயக் கத்தில் சேர்ந்துள்ளவர்கள் பலர் மிக இளையவர்கள் என்பதை, அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், யாரையும் கட்டாயப்படுத்தி இயக்கத் தில் சேர்க்கவில்லை என்று கூறுகி றார்கள்.

விடுதலைப்புலிகளின் அரசியல் தலை வர் யோகரெட்ணம் என்கின்ற யோகி அவர்கள், தங்கள் குடும்பத்தினர்களுக் கும், நண்பர்களுக்கும் இழைக்கப் பட்ட கொடுமைகளைக் கண்டு எங் கள் இயக்கத்தில் தாமாகவே வந்து சேர்ந்த இளைய தொண்டர்கள் என்று அவர்களை வர்ணிக்கின்றார். இந்த இளம் புலிகளை ஏன் இப்படி போர் செய்ய வந்தீர்கள் என்று கேட்டால், சொல்லி வைத்தது போல், சரியான காரணங்களை ஒரே மாதிரியாக ஒப்பு விக்கின்றார்கள். ஆனால், அவர்கள் இயந்திர மனிதர்கள் போல் பேசவில் லை, உணர்ந்து தான் பேசுகிறார்கள். இளைஞர்கள் பகல் உணவு எடுக்கும் போது, கேலியும், சிரிப்புமாக இருக்கி ன்றனர். கடும் இராணுவ ஒழுங்கு முறை தளர்க்கப்பட்ட நேரங்களில் நகைச்சுவையாய் பேசுகிறார்கள்.

ஒரு மரத்தின் பின் புறம் பதுங்கியிரு ந்த போது, அருகில் வெடித்த குண்டி னால், இரண்டு கைகளையும் இழந்து விட்ட சுபா என்கின்ற பெண் கூட, புன்சிரிப்புடன் தான் காட்சியளிக்கின் றாள். இப்போது அவள் பேனாவை வாயில் கவ்வி எழுதப் பழகி வருகின் றாள். காலால் துப்பாக்கியை இயக்கப் பயிற்சி செய்து வருகின்றாள். இந்த அளவிற்கு கொள்கைப் பற்றும், ஒழு க்கமும் இயக்கத்தில் காணப்படுகின் றது. சுதந்திரத் தமிழீழம் உருவா னால், விடுதலைப்புலிகளால் வாழ்க் கையின் எல்லாத் துறைகளுக்கும், இதே போல கடும் ஒழுங்கு முறை விரிவாக்கப்படும் என்று விமர்சகர்கள் அஞ்சுகிறார்கள். இப்போதே விடுதலை ப்புலிகள் தாங்கள் தான் தமிழ் மக்க ளின் பிரதிநிதிகள் என்று அங்கீகரிக் கப்பட வேண்டும் என்று கோருகின் றார்கள். வடபகுதி அவர்கள் கட்டுப் பாட்டில் தான் உள்ளது. விடுதலைப் புலிகளின் உச்ச நிலைத் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். வதந்திக்காரர்களால் பல முறை கொல்லப்பட்டவர். அவருக்கே எத் தனை முறை என்ற கணக்கு நினை வினில் இருக்குமா என்பது சந்தே கமே. அவரது ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் அவர் உயி ரோடு வாழும் தன்னிகரில்லாத் தலை வராகத் தான் காட்சியளிக்கிறார் என்று சொன்னால் அது மிகையா காது.

புலி போன்று வரிகள் போடப்பட்ட இராணுவ உடையில், அவர் கம்பீரமா கத் தோற்றமளித்து போர் நன்றாகத் தான் நடந்து கொண்டு இருக்கின்றது என்று அவர் என்னிடம் சொன்னார். போரினால் இப்படிப் பல்லாயிரக் கண க்கான பொது மக்கள் தமிழரும்–சிங் களவரும் செத்து மடிகிறார்களே என்ற கேள்விக்கு அவர் பதட்டப்படா மல் இந்த இனப்பிரச்சினை தீர இரா ணுவத் தீர்வு ஒன்றை திணிக்க முடி யாது என்பது இப்போது ஸ்ரீலங்கா அரசிற்கு புரிந்திருக்கும் என்று அவர் பதிலளித்தார்.

சர்வாதிகார வழி முறைகளை பயன் படுத்துகிறீர்களா? என்ற கேள்விக்கு, அவ்வாறெல்லாம் அல்ல, இப்போது அரசியல் சமூக அமைப்புக்களை விரிவாக உருவாக்கி உள்ளோம் என்று கூறினார். இயக்கத்தில் சேர்ந்து ள்ள இளைஞர்கள் நன்கு கவனிக்கப் படுகிறார்கள் என்றும் தேவையான போது போரில் ஈடுபடுகிறார்கள் என் றும் கூறினார்.

சமீபத்தில், ஆனையிறவு முகாமை கைப்பற்ற நடந்த பெரும் போரின் பிறகும் கூட பிரபாகரன் அவர்களிடம் தன்னம்பிக்கை குறைந்து விட்டதாக தோன்றவில்லை. பலவற்றைக் கற்று கொண்டோம் என்று கூறிய அவர், இந்தப் போர் கொரில்லாப்படை, மரபு வழிப்படையாக மாறி வரும் பாதை யில், ஒரு உச்சமான கட்டம் என்று விளக்கினார். விடுதலைப்புலிகளின் தரப்பில் 500 பேர் ஆனையிறவு முகாம் போரில் இறந்து விட்டதாகவும், அவர் களின் புகைப்படங்கள் அடங்கிய நினைவு நூல் ஒன்று வெளியிடப்பட்டு ள்ளது என்றும் அவர் கூறினார். இன் னும் சில நாட்களில் இவர்களில் திரு முகங்கள் யாழ்ப்பாணச் சுவர்களில் தீட்டப்பட்டு மேலும் பல தமிழ் இளை ஞர்கள், விடுதலைப்புலி இயக்கத்தில் சேர வாய்ப்பு உள்ளதாக தோன்றுகி றது.



www.padippakam.com



# நிருபர் கிறிஸ்தோபர் மொறிசுக்கு வழங்கிய சிறப்பு பேட்டி



**கிழக்கு மாகாண நிலைமை பற்றி குறிப்பாக இராணுவ நிலை பற்றி நீங்கள் கருதுவது என்ன?**

கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைமை மிகவும் சிக்கலானது. இப்பகுதியில் பெரும் பான்மையாக தமிழ் மக்களும், சிங்கள, முஸ்லீம் மக்கள் சிறுபான்மையாகவும் வாழ்கிறார்கள்.

திருகோணமலையிலும் அம்பாறையிலும் நிறைய சிங்கள குடியேற்றங்கள் இருக்கின்றன. இவற்றை பாதுகாக்கும் நோக்கத்தோடு பெரும் அளவில் இராணுவமும், நகர காவற்படைகளும் குவிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண கரையோரமாக பெரும் அளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படி இருந்தும் கிழக்கு மாகாணம் சிங்கள அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது என கூற முடியாது. கிழக்கில் எமது ஆயுத நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கின்றன. எமது போராளிகள் எல்லாப் பகுதிகளிலும் நடமாடித்திரிகின்றார்கள்.

கிராமப்புறங்களும், காட்டுப் பகுதிகளும் எமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விட்டோம் என கூறுவது முற்றிலும் தவறு.

**1990 ஜூன் திங்களில் நீங்கள் இருந்த நிலைமையிலும் பார்க்க இப்போது மோசமான நிலைமையில் அல்லவா இருக்கிறீர்கள்?**

யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் கிழக்கு மாகாணம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது முற்றிலும் தவறு. யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் நீண்ட காலமாக இந்திய துருப்புகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்திய துருப்புக்கள் வெளியேறிய பின்னர் இராணுவமும், நகர காவற்படையும் அப்பகுதியில் நிலை கொண்டு இருந்தனர். கிழக்கு மாகாணம் விடுதலைப்புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது எனக் கூற முடியாது.

**ஆனையிறவு போரில் தமக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளது என இராணுவம் கூறுகிறதே போர் உத்தி என்ற முறையில் நீங்கள் பிழையான உத்தியை கையாண்டதாக கருதுகிறீர்களா?**

ஆனையிறவுப் போர் பெரும் வெற்றி என சிங்கள அரச கூறுவது முழுப் பொய்ப் பிரச்சாரம். எமது வெற்றிகரமான தாக்குதலினால் ஆனையிறவு தளம் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்தது. 800 இராணுவ வீரர்கள் எமது முற்றுகையில் சிக்கி கொண்டனர். இவர்களை மீட்பதற்காக 8000 பேர் கொண்ட பெரும் தாக்குதலை நடத்த சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. இத்தாக்குதலில் சிங்கள அரசுக்கு எப்போதும் இல்லாதவு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டது. 5 மைல் தூரம் படைகளை நகர்த்த 24 நாட்கள் எடுத்தது. இதனை வெற்றி என எக்காளம் இடுவது சிறுபிள்ளைத் தனமானது. ஓர் பெரிய மரபு வழிப் போரை நேருக்கு நேர் எதிர் கொள்ளும் வளர்ச்சியை விடுதலைப்புலிகள் இயக்கம் அடைந்து இருக்கிறது. ஆனையிறவு இதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு.

**விடுதலைப்புலிப்படையை மரபு முறையிலான இராணுவமாக விரிவு படுத்த நீங்கள் எடுத்து வரும் முயற்சி பற்றி எடுத்துக் கூறுவீர்களா? இது புலிப்படையின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு முக்கியமானது?**

சிங்கள அரசுக்கு எதிரான எமது ஆயுத போராட்டம் 15 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றை கொண்டது. இந்த நீண்ட கால போரில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சியை அடைந்து இருக்கின்றோம்.

நீண்ட காலமாக கொரில்லாப் போர் முறையை கையாண்டு வந்த நாம் இப்பொழுது மரபு வழியிலான இராணுவமாக மாறி வருகின்றோம். இராணுவ ரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி தான் இந்த வளர்ச்சி எமது போராட்டத்தின் பெரும் திருப்பு முனையாகவும் அமைகிறது. இந்த எமது வளர்ச்சியின் மூலம் சிங்கள அரச ஒரு பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பது தான்.

**உங்கள் படையின் அளவு விரிவு பட்டு வரும் இந்த நேரத் தில் நீங்கள் படையில் சிறுவர்களையும், சிறுமிகளையும் சேர்த்துக் கொள்வதாக கண்டனங்கள், குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. நீங்கள் இளம் வயதில் ஆட்களை ஏன் சேர்த்துக் கொள்கிறீர்கள்? இப்படி சேர்த்துக் கொள்பவர்கள் எத்தனை வயதில் உங்கள் படையில் போர் முனைக்கு செல்கிறார்கள்?**

நாம் பலவந்தமாக எவரையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. அரச பயங்கரவாத ஒடுக்கு முறையினாலும், எமது சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களினாலும் சிறுவர்கள் தாமாகவே எமது இயக்கத்தில் சேர்கின்றார்கள் என்பது தான் உண்மை அது மட்டுமல்லாது பல பெற்றோர்கள் எமது கூட்ட மேடைகளிலேயே தமது சிறு புதல்வர்களையும், புதல்விகளையும் எம்மிடம் ஒப்படைக்கின்றார்கள். அப்படி இருந்தும் இந்த சிறுவர்களுக்கும் நாம் கல்வி வசதி செய்து கொடுக்கின்றோம் பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கிறோம் தொழில் அறிவை வளர்த்து வருகின்றோம். சிறு வயதானவர்களை நாம் போர்க் களத்திற்கு அனுப்புவதில்லை.

**இந்தியாவுக்கும் உங்களுக்கும் இடைப்பட்ட உறவை பற்றி பார்ப்போம்? இந்த உறவு இப்போது மோசமான நிலையில் இருக்கிறது இது உங்களுக்கு கவலையை தருகிறதா?**

நீண்ட காலமாகவே எமக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலான உறவில் பிரச்சினைகள் ஏற்பட்டு வந்து இருக்கிறது. 1983ல் இந்திய அரசு எமது பிரச்சினையில் தலையிட்டது. ஆயுத பயிற்சி கொடுத்து பல கும்பல்களை உருவாக்கியது. பின்னர் 1987ல் சிங்கள அரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்து, அதனை எமது மக்கள் மீது திணிக்க முயன்றது. அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்ததும் எம் மீது ஒரு யுத்தத்தை ஏவி விட்டது. இப்படியாக இந்திய அரசு தனது சொந்த நலனை பேண முயன்று வந்தது. நாம் எமது மக்களின் நலனை முதன்மை படுத்திய போது எமக்கும் இந்திய அரசுக்கும் முரண்பாடும், பகையும் ஏற்பட்டது. இந்த நீண்ட கசப்பான வரலாற்றின் தொடர்ச்சியாகவே எமது இயக்கத்திற்கு எதிராக இந்திய அரசு செயற்படுகிறது. இந்தியாவின் இந்த அணுகு முறை எமக்கு கவலையையும், ஏமாற்றத்தையும் கொடுக்கத்தான் செய்கிறது.

**தமிழ் நாட்டில் விடுதலைப்புலிப் படையினரின் நடவடிக்கைகள் நசுக்கப்பட்டு வருவது பற்றி குறிப்பாக உங்களால் ஏதாவது கூற முடியுமா? இலங்கையில் நீங்கள் நடாத்தும் போராட்டம் தமிழ் நாட்டில் உங்களுக்கு எதிராக எடுத்து வரும் நடவடிக்கைகளால் எந்த வகையில் மிக மோசமாக பாதிக்கிறது?**

நீண்ட காலமாகவே தமிழ் நாட்டிலும் விடுதலைப்புலிகளை பகடைக்காய்களாக வைத்தே அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெற்று வருகின்றது. தமிழ் நாட்டு மக்களை எமது இயக்கத்திற்கு எதிராகவும், எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராகவும் திருப்பி விட இந்திய மத்திய அரசும், தமிழ் நாட்டு அரசும் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. எமது இயக்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த திட்டமிட்ட முறையில் விஷமப் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் தமிழ் நாட்டில் பரந்து பட்ட மக்கள் எமது இயக்கத்திற்கும், எமது போராட்டத்திற்கும் ஆதரவாக இருக்கிறார்கள், இந்த மக்களின் ஆதரவு இருக்கும் வரை எமது போராட்டத்திற்கு பாதிப்பு ஏற்பட போவதில்லை.

**ராஜீவ் காந்தி அவர்களின் படு கொலைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என நீங்கள் கூறி வருவது எமக்கு தெரியும் எனினும் இந்திய புலனாய்வு பிரிவினர் நீங்கள் தான் இதற்கு பொறுப்பு என திடமாக நம்புவது போல் தெரிகிறது. இதன் காரணமாக லண்டனில் உள்ள உங்கள் பிரதிநிதி கிட்டு அவர்கள் பிரிட்டிஷ் அரசினால் பிரிட்டனை விட்டு வெளியேற்றப் பட்டு இருக்கிறார். சர்வதேச அரங்கின் உணர்வலைகள், கருத்துக்கள் உங்களுக்கு எதிராக திரும்புகின்றன என நீங்கள் கவலைப்படுகிறீர்களா?**

ராஜீவ் காந்தியின் கொலைக்கும் எமது இயக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்த குற்றச்சாட்டு இன்றும் நிரூபிக்கப்படவில்லை. இந்த கொலைக் குற்றச்சாட்டை எம் மீது சுமத்தி சர்வதேச ரீதியாக எமது இயக்கத்தை களங்கப்படுத்த இந்திய அரச முயற்சித்து வருகிறது.

கிட்டுவின் விடயத்தில் பிரித்தானிய அரச நடந்து கொண்ட விதம் எமது மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்து இருக்கிறது. வைத்திய சிகிச்சைக்காக லண்டன் செல்வதற்காக பிரித்தானிய தூதரகமே அனுமதி வழங்கி இருக்கிறது.

கிட்டு ஒரு அங்கவீனர். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதி என்று தெரிந்தும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது ஒரு பொறுப்பற்றதும், மனிதாபிமானமற்றதுமான செயலாகும்.

**LTTEயின் அரசியல் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டும் கூட புலிப்படையினர் முக்கியமாக ஓர் ஈன இரக்கமற்ற இராணுவ அமைப்பு என இலங்கையில் உங்களை எதிர்த்து குரல் எழுப்புபவர்கள் கூறுகின்றனர். உங்கள் அரசியல் பிரிவின் பங்கு, பணி எப்படிப்பட்டது என கூறமுடியுமா?**

அப்படிச் சொல்வது முற்றிலும் தவறு. நாம் ஓர் பிரமாண்டமான அரசியல் அமைப்பைக் கட்டி எழுப்பியுள்ளோம் எமது மக்களிடையே சிவில் நிர்வாகம், உணவு உற்பத்தி, நிவாரணம் சமூகசேவை அகதிகள் சேவை போன்ற விடயங்களை எமது அரசியல் பிரிவே கவனித்து வருகின்றது. எமது பகுதியில் உள்ள மக்களின் அன்றாட தேவைகளில் எமது அரசியல் பிரிவே பெருமளவில் பங்கு வகித்து வருகிறது என்பது தான் உண்மை.

**கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாஸா ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி உங்கள் கருத்து என்ன? கொழும்பில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி தமிழர் பிரச்சினையில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

நிலைமையை நாம் இப்போது கவனமாக அவதானித்து வருகிறோம். இப்போதைக்கு இதுபற்றி அபிப்பிராயம் எதுவும் கூறுமுடியாது.

**இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதற்கான பல முயற்சிகள் கடந்த சில மாதங்களாக முயற்சிக்கப்பட்டு**

12ம் பக்கம் பார்க்க...

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் பலகை

நக்கீரன்

# எமது விடுதலைப் பயணம் தொடரட்டும்...

மின்னாமல் முழங்காமல் இடி விழுந்தது போல ஜனாதிபதி பிரேமதாஸவின் தலையில் அரசியல் இடியொன்று திடுமென விழுந்திருக்கிறது. அவரை பதவியிலிருந்து அகற்ற கோரும் மனுவுருவில்அந்த இடி விழுந்திருக்கிறது இடித்தவர்கள் வேறு யாருமில்லை. முன்னாள் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஒருவர், மற்றவர் முன்னாள் மகாவலி அவிபிருத்தித் திட்ட அமைச்சர் காமினி திசாநாயக்கா. ஜனாதிபதி பிரேமதாஸாவால் பதவி எதுவும் கொடுக்கப்படாது ஒதுக்கப்பட்டவர். வேடிக்கை என்னவென்றால் இந்த இருவருமே பிரதமர் பதவிக்கு ஒன்றாகப் போட்டியிட்டவர்கள். அதையெல்லாம் மறந்து ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிரான போரில் தாங்கள் ஒன்றுபட்டு விட்டதாக பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்திருக்கிறார்கள்.

சிங்கள ஸ்ரீ லங்காவின் உள் விவாகாரங்களில், அங்கு நடைபெறும் அரசியல் வெட்டுக்குத்துக்கள் பற்றி தமிழ்ஈழம் தலையிடக்கூடாது என்பது உண்மைதான். இருந்தும் அண்டை நாட்டின் அரசியல் ஸ்திரம் பற்றி நாம் வாழாதிருக்கமுடியாது. அதன் தாக்கங்கள் எதிர் விளைவுகள் பற்றி நாம் கண்டிப்பாக கவனம் செலுத்தியே ஆக வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி சரி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சரி இப்படியான உட்கட்சிப் பூசல்களுக்கு முன்பும் முகம் கொடுத்திருக்கின்றன.

1964ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதத்தின் மீது நடந்த வாக்கெடுப்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சி.பி.டி. சில்வா, காணி நீர்ப்பாசன அமைச்சர், சபைத்தலைவர் தனக்கு ஆதரவான 13 சு.க. பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சிப்பக்கம் தாவி அரசுக்கெதிராக வாக்களித்ததைத் தொடர்ந்து பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசு கவிழ்ந்தது.

அன்று எப்படி சி.பி.டி. சில்வா ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் காலை வாரி விட்டு அவரது ஆட்சிக்கு குழி பறித்தாரோ, அதே போன்று இன்று லலித் அத்துலத் முதலி கோஷ்டி பிரேமதாஸாவின் காலை திடுமென வாரிவிட்டிருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம் பிரேமதாஸாவின் பதவிக்கு உடனடியான ஆபாத்தில்லை. பிரேமதாஸாவைப் பதவி நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் அவருக்கு எதிரான மனு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு மொத்த 225 உறுப்பினர்களில் 150 உறுப்பினர்களது ஆதரவு தேவை. பாராளுமன்றத்தில் 13 ஆசனங்கள் காலியாக இருக்கின்றன. இதில் ஈரோஸ் உறுப்பினர்களது பதவி விலகலால் காலியான ஆசனங்கள் 12. வெற்றிடங்களை கழித்து கணக்குப் பார்த்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு 141 பேரது ஆதரவு போதுமானதாக இருக்கும். மனுவை பாராளுமன்றம் மூன்றில் இரண்டு வாக்குகளால் நிறைவேற்றினாலும் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலும் அவசியம். அதற்குக் காலம் எடுக்கும். எனவே தான் பிரேமதாஸாவின் பதவிக்கு குறைந்தது மூன்று மாத காலத்திற்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை.

ஆனால் பாராளுமன்றத்தின் ஆயுளுக்கு ஆபத்திருக்கிறது. ஏனென்றால் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் நிதி சம்பந்தமான தீர்மானங்களை தோற்கடிக்க சாதாரண பெரும்பான்மை போதும். ஐ.தே.க கட்சிக்கு சபாநாயகர் உட்பட 125 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 20 பேர் எதிர்க்கட்சிக்குத் தாவினாலே போதும். அரசு கவிழ்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிதாக தேர்தல் நடைபெற வேண்டியிருக்கும்.

பாராளுமன்றத்தை புரட்டாதி மாதம் 24ம் நாள் மட்டும் ஒத்தி வைத்ததன் மூலம் ஜனாதிபதி பிரேமதாஸா கொடுக்க வேண்டியதை கொடுத்து, காட்ட வேண்டியதைக் காட்டி வேலி பாய்ந்தவர்களை மீண்டும் பட்டிக்குள் அடைக்க போதிய அவகாசம் கிடைத்திருக்கிறது.

மனுவின் உள்ளடக்கம் சிதம்பர இரகசியமாக இருக்கிறது. மனுவில் கையொப்பம் இட்டவர்கள் அதனைப் படிக்க அனுமதிக்கப்படவில்லை. மனுவை படித்த பின் தான் முடிவு செய்வேன் என்று சொல்லிய ஒரே பா. உறுப்பினர் ஸ்ரான்லி திலகரத்ன. படித்து விட்டு கையெழுத்துப் போட மறுத்த ஒரேயொரு சுதந்திரக்கட்சி உறுப்பினரும் இவர் தான். அது மட்டுமல்ல ஜனாதிபதி பிரேமதாஸாவின் தலைக்கு உலை வைக்க வெடிகுண்டு தயாராகிறதென்று அமைச்சர் வீரசிங்கி மல்லிமாராச்சி மூலம் அவருக்கு அபாய அறிவிப்பு செய்தவரும் திலகரத்னா அவர்களே.

அரசியல் வட்டாரங்களில் உலா வரும் செய்தி துணுக்குகளையும்—வதந்திகளையும் வைத்துப் பார்த்தால் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிராக பாராதூரமான குற்றச்சாட்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. இதில் கொலைக் குற்றமும் அடங்கும். றிச்சாட் டி சொய்சா (இவரது தாயர் ஒரு தமிழ்ப் பெண்) என்ற பத்திரிகையாளர் கொலைக்கு திரைமறைவில் செயல்ப்பட்டார் என்பதுதான் குற்றச்சாட்டு. இப்போதல்ல, டி சொய்ஸா கொலையுண்ட நாட்களிலும் அந்தக் கொலையில் பிரேமதாஸாவிற்கு பங்குண்டு என்ற வதந்தி பலமாக அடிபட்டது ஞாபகம் இருக்கலாம்.

வரிந்து கட்டிக் கொண்டு ஜனாதிபதி பிரேமதாஸா மீது லலித்—காமினி கோஷ்டி அள்ளி வீசும் குற்றச்சாட்டுகளில்
பெரும்பான்மையானவற்றில்
எந்தவிதமான புதுமையும் இல்லை. மெத்தவும் அவை பழசானவை.

நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி முறையை நீக்கி பழைய பாராளுமன்ற ஆட்சி முறையை கொண்டு வருதல்.

தனி மனித சர்வாதிகாரம்

நெருங்கிய உறவினர்களுக்கு பதவி வழங்கியமை

பணவிரயம்

நியமனங்களில் ஊழல்

மந்திரிகளையும், மந்திரி சபையையும் மட்டந்தட்டியது.

இவையெல்லாம் பிரேமதாஸா காலத்தில் மட்டுமல்ல, இன்றைய அரசியல் யாப்பின் தந்தையும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின்

4 ம் பக்கம் பார்க்க

**சிறு தொழில் ...(அ) பக்கத் தொடர்ச்சி**

உதாரணமாக—உதை பந்தாட்டக்கழகம் ஒன்றின் வாராந்த போட்டிக்கு எத்தனை பேர் பார்வையாளர்களாக வருவார்கள் என்பது அக்கழகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும். முதலாவது உதை பந்தாட்டப் போட்டியைப் பார்வையிட வந்தவர்கள் இருபதினாயிரம் என்றும், பத்தாவது போட்டிக்கு முப்பதினாயிரம் என்றும் கொள்வோமாயின் இங்கு மேலதிகமாக வருகை தந்த பத்தாயிரம் பார்வையாளர்கள் அக்கழகத்தின் முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்துகிறார்கள்.

இதே போன்று ஒரு சில்லறை வியாபாரம் ஒன்றில் ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கு இரண்டாயிரம் நுகர்வோர் சென்றதன் மூலம் அவ்வியாபாரத்தின் விற்பனை ஐம்பதினாயிரம் டொலர்கள் எனக் கொள்வோம். அடுத்த மாதம் மொத்த விற்பனைத் தொகையில் மாற்றம் இல்லையெனவும் நுகர்வோரின் எண்ணிக்கை ஆயிரத்தி நானூறு எனவும் கொள்வோம். இங்கு மொத்த விற்பனையில் மாற்றம் இல்லாத போதும் நுகர்வோரின் எண்ணிக்கை அறுநூறாக வீழ்ச்சியடைந்தமை அவ்வியாபாரத்தின் மொத்த விற்பனை அதிகரிப்பை மட்டுப்படுத்தியுள்ளதாகக் கருதல் வேண்டும். ஒரு திறமை மிக்க முயற்சியாளர் அதற்கான காரணங்களை ஆராய்ந்து நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் கூடிய முயற்சியை மேற்கொள்வார்.

அடுத்து நீங்கள் உதவி பெறக்கூடியதன் மூலமாக உங்கள் தொழிலுடன் தொடர்பு கொண்டுள்ள வெளியாட்களைக் கொள்ளலாம். இதில் கணக்குகளைப் பராமரிப்பவர், வங்கி முகாமையாளர், சட்ட ஆலோசகர், பொருட்களை விநியோகிப்பவர்கள், வாடிக்கையாளர்கள் என்போர் அடங்குவர். இவர் கள் எவ்வாறு உங்களுக்கு உதவிகளை வழங்க லாம் என்பதை அவதானிப்போம்.

உங்கள் கணக்குகளை பராமரிப்பவர்—கணக்காளர், உங்கள் தொழிலுக்கான கட்டுப்பாட்டு முறைகள், உங்களது தனிப்பட்ட வருமான வரிப் பிரச்சினைகளையும், உங்கள் தொழிலில் வருமான வரிப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான ஆலோசனைகள், நிதியைப் பெறும் வழி மூலங்கள், கடன் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல், வரி அறிக்கைகளை பூர்த்தி செய்தல், உங்களது, காசுச் சுற்றோட்டத்தை ஒழுங்குப்படுத்தல் போன்ற உதவிகளை வழங்குவார்.

வங்கி முகாமையாளர்களைப் பொறுத்தவரையில் இவர்கள் தங்களது சாதாரண வங்கித் தொழிலுக்கு மேலாக ஆலோசனை வழங்குவது இந்நாட்டின் வங்கித் தொழிற் சிறப்பிற்கு ஒரு காரணமாகும். வங்கி முகாமையாளர் ஒருவர், பொதுவான பொருளாதார நிலை பற்றிய விளக்கம், தொழிற் துறைகளின் போக்கு, புதிய பொருட்களை சந்தைப்படுத்தல், உங்கள் வாடிக்கையாளர்களது கடன் வழங்கும் நிலையை பரிசோதித்தல் தொடர்பான உதவிகளை வழங்குவார்.

பெரும்பாலான தொழில் முயற்சியாளர்கள், தமது தொழிலை ஆரம்பிக்கும் பொழுது அது தொடர்பான சட்டத்தேவைகளைப் பெறுவதற்கு சட்டத்தரணிகளை நாடுவர். அதன் பின்னர் சட்டத் தொடர்புடைய விடயங்களுக்கு மட்டுமே நாடுவர். குறிப்பாக, ஈடு, முதலீடு, அரசியல் தொடர்பு போன்ற விடயங்களில் உதவிகளைப் பெறுவர்.

உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதில் உங்கள் வாடிக்கையாளர்களும், பொருட்களை விநியோகிப்பவர்களும் பிரதானமானவர்கள். உங்கள் தொழில் உங்களது வாடிக்கையாளரில் தங்கியுள்ளது. அவர்களது ஆலோசனைகள் உங்கள் உற்பத்திப் பொருளின் அல்லது சேவை யின் குறை நிறை பற்றியதாக அமையும். இவர்களே உங்கள் பொருளின் அல்லது சேவையின் தரம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவதனால் ஒரு ஒழுங்கான கால அடிப்படையில் நிலையான வாடிக்கையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துதல் சிறந்ததாகும்.

இறுதியாக உங்கள் தொழில் முயற்சியுடன் நேரடித் தொடர்பில்லாத உதவி மூலகங்களைப் பயன்படுத்துதல் எவ்வாறு என பார்ப்போம். மத்திய அரசின் உதவிகள், மாகாண அரசின் உதவிகள், புள்ளி விபரத் திணைக்களம், வியாபாரச் சங்கங்கள் என்பன இதில் அடங்கும்.

கடன்கள், உதவிப்பணம் என்பவற்றுடன் சிறு தொழில் விருத்திக்கான பல்வேறு உதவித் திட்டங்களை கனடிய அரசு வழங்கி வருகின்றது. ஒரு தொழில் முயற்சியை உருவாக்கி வேலை வார்ப்பை வழங்குதல், ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தல், உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குதல், தொழில் நுட்ப ஆராய்ச்சி என்பன தொடர்பாக அரசாங்க உதவிகள் எப்போதும் உண்டு. இவ்வுதவிகளை வழங்கும் மத்திய அரசு நிறுவனங்கள், கைத்தொழில் வர்த்தகத் திணைக்களம் (Department of Industry, Trade and Commerce) மத்திய தொழில் அபிவிருத்தி வங்கி (Federal Business Developement Bank) சிறு தொழிலுக்கான ஆலோசனை உதவி (Councelling Assistance for Small Enterprises-Case) என்பன குறிப்பிடத்தக்கவை.

மாகாண அரசு அடிப்படையிலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வுதவிகள் வியாபார விதிமுறைகள், சந்தை ஆராய்ச்சி என்ற வகையில் அடங்கும் சந்தை ஆராய்ச்சி சம்பந்தமான முயற்சிகளுக்கு மாகாண உதவிப்பணங்களும் வழங்கப்படுகின்றது. மத்திய மாகாண உதவிகள் தொடர்பான விடயங்களை உங்கள் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

வியாபாரச்சங்கங்களில் அங்கத்துவம் பெறுவதும் ஒரு தொழிலின் பாதுகாப்பிற்கு உதவுவதாக அமையும். ஐம்பது வீதத்துக்கு மேற்பட்ட தொழில் முயற்சி இந்நாட்டில் வியாபாரக் கழகத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இக்கழகங்கள் தரமான தகவல்களை வழங்குவதிலும் வியாபாரங்களுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்துவதிலும் உதவிகளை புரிந்து வருகின்றன. இக்கழகங்களது தகவல்களும் கனேடிய புள்ளிவிபர திணைக்கள அறிக்கைகளும், தொழில்கள் பற்றிய தற்காலப் போக்கை தெளிவுபடுத்துகின்றன.

எனவே தொழில் முயற்சியாளர் ஒருவர் தனக்கு தேவைப்படும் உதவிகளை விரைவாகவும் பொருத்தமானதாகவும் பெறுவதற்கு இந்நாட்டில் கிடைக்கக்கூடிய உதவி வழிமுறைகள் பற்றிய விளக்கங்களைக் கொண்டிருப்பது தவிக்கமுடியாததாக அமைகின்றது.

**அடுத்த இதழில்**

**தொழில் முயற்சிக்கான மூலதனமும் அதனைப் பெறக்கூடிய வழிகளும்.**

படிப்பகம்